shraddhaa suuktam

shraddhayaa devo davatvamakshhute.  shraddhaa pratishhThaa lokasya devii.  saa no jushhaaNopauaGYamaagaat. kaamavatsaamR^ita.m duhaanaa..
shraddhaa devii prathamaa R^itasya.  vishvasya bhartrii jagataH pratishhThaa.  taa.m shraddhaa.m havishhaa yajaamahe.  saa no lokamamR^ita.m dadaatu.  iishaanaa devii bhuvanasyaadhipatnii..

## श्रद्धा सूक्तम्

श्रद्धया देवो दवत्वमश्नुते।  श्रद्धा प्रतिष्ठा लोकस्य देवी।  सा नो जुषाणोपौज्ञमागात्।

कामवत्सामृतं दुहाना॥

श्रद्धा देवी प्रथमा ऋतस्य।  विश्वस्य भर्त्री जगतः प्रतिष्ठा।  तां श्रद्धां हविषा यजामहे।  सा

नो लोकममृतं ददातु।  ईशाना देवी भुवनस्याधिपत्नी॥

(யஜுர் வேதம் காடகம் 3-ம் ப்ரச்நம் 9-12)

(இந்த இரண்டு ருக்குகளுக்கும் நஞ்சீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்த பாஷியத்தில் சொல்லியபடி அர்த்தம் எழுதப்படுகிறது.)

இந்த இரண்டு மந்திரங்களிலும், ஸகல வேதங்களிலும் ஸாரமாக வெளியிடப்பட்டும், உலகில் பிரஸித்தமுமான ஸ்ரீ லக்ஷ்மியின் ஸ்வரூபம், திருமேனி, ஐசுவர்யம் முதலியவைகள் சொல்லப்படுகின்றன. அதில் முதல் மந்திரம் ஸர்வேசுவரனான ஸ்ரீ வாஸுதேவனுக்கும் ஸர்வேசுவரத்தன்மை ஸ்ரீ லக்ஷ்மியின் அதீனமென்று சொல்லுகிறது.  ஸ்வதஸ்ஸித்தமான பிரகாசம் முதலிய கல்யாணகுணங்களோடு கூடிய வாஸுதேவன் ச்ரத்தையென்று வேறு திருநாமமுள்ள ஸ்ரீ லக்ஷ்மியினால் தேவத்தன்மையை அடைகிறான்.

( ஸ்வதஸ்ஸித்தமான மேன்மையையுடையவன் என்று வேதங்களில் சொல்லப்பட்ட பரதேவதையான பகவான் தனது பத்னியான லக்ஷ்மியினால் உண்டாகிய மேன்மையையுடையவன் எனறு ஏற்படுகிறதே என்று ஓர் ஆக்ஷேபம் வரும்.  இதற்கு ஸமாதாநம் - இயற்கையாகவே காந்தியுள்ள ஸூரியனுக்குக் காந்தியின் ஸம்பந்தத்தால் ஒரு மேன்மையேற்படுவது போல், லக்ஷ்மிக்கும் மேன்மையைக் கொடுக்கும் பகவானுக்குத் தன்னுடைய பத்நியினாலும் மற்றொரு மேன்மை இருப்பதில் தோஷமில்லை.  அழகாயிருப்பவனே ஆபரணத்தினாலும் அழகாகப் பிரகாசிக்கிறான் என்று சொல்வதுண்டு.  தேவனாயிருக்கையாவது -விளையாட்டையுடையவனாயிருப்பது முதலியது.  அந்த லீலை முதலியவைகளும் தன் பத்னியுடன் கூடிய வாஸுதேவனுக்கு ஸம்பவிக்கிறது -- என்று சொல்லுவது ஸரியான வழி.  இப்படியே பெரியோர்களும்

சொல்லியிருக்கிறார்கள் - என்று ஸ்ரீ சது:ஸ்லோகீ பாஷியத்தில் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்திருக்கிறார். )

சேதநாசேதநாத்கமான இப்பிரபஞ்சத்தையுண்டு பண்ணுதல், காப்பாற்றுதல், ஸம்ஹரித்தல் முதலிய வியாபாரங்களால் விளையாடும் ச்ரத்தை யென்று சொல்லப்பட்ட லக்ஷ்மீ இவ்வுலகத்திற்கும் ஆதாரமாயிருப்பவள். அல்லது, உலகைத் தரித்துப் போஷித்து போக்கியமான பதார்த்தங்களைக் கொடுத்து ஸ்தாபிக்கிறவள். பசு கன்றுக்குப் பாலைக் கொடுப்பது போல அவரவர்களின் இஷ்டப்படி வேண்டிய எல்லாவற்றையும் கொடுப்பவளான அந்த லக்ஷ்மியானவள் நாம் செய்யும் ஆராதனத்தில் ப்ரீதியுள்ளவளாய் ஸமீபத்தில் எழுந்தருள வேண்டும். இரண்டாவது மந்திரத்தினால், ஸர்வகர்மங்களால் ஆராதிக்கப்படுமவள் என்றும், ஸர்வபலங்களையும அளிப்பவள் என்றும் சொல்லப்படுகிறது. நற்கருமங்கள் செய்ய ஆரம்பிக்கையிலேயே ஆராதிக்கப்படுபவளாக எழுந்தருளுவாள். உலகங்களைப் போஷிப்பவள். உலகங்களுக்கு ஆதாரபூதையானவள். அதாவது நற்கருமங்களால் ஆராதிக்கப்பட்டு ஸந்தோஷமடைந்து மழை முதலியவைகளை யுண்டு பண்ணி உலகத்தை நிர்வஹிப்பவள். இப்படி மஹிமை பொருந்திய ஸர்வேசுவரியான மஹாலக்ஷ்மியைப் பத்ர புஷ்பங்களாலும், சருபுரோடசங்களாலும், தன்னைய்யும் தன்னைச் சேர்ந்தவர்களையும் ஸமர்ப்பிப்பதினலும் பிரீதியுடன் ஆராதிப்போம். நம்மால் ஆராதிக்கப்பட்ட லக்ஷ்மி ஆராதகர்களான நமக்கு பரமபதத்தை அளிக்கட்டும். அவள் ஸர்வலோகங்களுக்கும் ஈசுவரியானவள், பகவானுக்குப் பத்னி; ஆச்ரிதர்களைக் காப்பாற்றுவது என்கிற யஜ்ஞத்தில் ஸஹதர்மசாரிணி; அப்படியே, உலக ஸ்ருஷ்டியிலும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் இவ்விருவர்களின் ஸங்கல்பப்படி உலக ஸ்ருஷ்டி முதலியன நடக்கின்றன என்றபடி.

யஜுர்வேதத்தில் 2-வது அஷ்டகம், 8-வது ப்ரச்நம், 8-வது அநுவாகத்தில் வேறொரு ச்ரத்தாஸூக்தமுள்ளது-

**श्रद्धयाग्निः समिन्धते। श्रद्धया विन्दते हविः। श्रद्धा भगस्य मूर्धनि। वचसाऽऽवेदयामसि। प्रियं श्रद्धे ददतः। प्रियं श्रद्धे दिदासतः। प्रियं भोजेषु यज्वसु। इदं म उदितं कृधि। यथा देवा असुरेषु। श्रद्धानुग्रेषु चक्रिरे। एवं भोजेषु यज्वसु। अस्माकमुदितं कृधि। श्रद्धां देवा यजमानाः। वायुगोपा उपासते। श्रद्धां हृदय्ययाऽऽकूत्या। श्रद्धाया हूयते हविः। श्रद्धां प्रातर्हवामहे। श्रद्धां मध्यन्दिनं परि। श्रद्धां सूर्यस्य निम्रुचि। श्रद्धे श्रद्धापयेह मा। श्रद्धा देवानधिवस्ते। श्रद्धा विश्वमिदं जगत्। श्रद्धां कामस्य मातरम्। हविषा वर्धयामसि।**

**“ शास्त्रार्थे विश्वासातिशयरूपा चितावृत्तिः श्रद्धा। तदभिमानिनी देवतापि तन्नामिकैव ”**

என்று ஸாயணர் பாஷியம். ( சாஸ்திரார்த்தத்தில் மிகுந்த விச்வாஸரூபமான சித்தவ்ருத்திதான் ச்ரத்தை. அதற்கு அபிமாநியான தேவதையும் அதே

பெயருள்ளவளே). "ச்ரத்தா மேதா ஸரஸ்வதீ" என்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் லக்ஷ்மியை ச்ரத்தையென்று இந்திரன் சொல்லியிருப்பதாலும், " அஹம் ச்ரத்தா ச மேதா ச" என்று ஸ்ரீ மஹாபாரதத்தில் லக்ஷ்மியே சொல்லியிருப்பதாலும் ச்ரத்தைக்கு அபிமானியான தேவதை லக்ஷ்மியே.

சிரத்தையினால இந்த அக்னி ஜ்வலிப்பிக்கப்படுகிறது. ஹவிஸூம் சிரத்தையால் அடையப்படுகிறது. ஸௌபாக்கியத்தின் தலையிலே (மேலே) இருக்கும் சிரத்தையை வாக்கியத்தினால் தெரிவிக்கிறோம். ஸௌபாக்கியத்துக் காரணம் ச்ரத்தை யென்று ஜனங்கள் முன்னிலையில் வெளியிடுவோம். ஏ சிரத்தையே! ஹவிஸைக் கொடுக்கிற எனக்கு இஷ்டம் ஸித்திக்கட்டும். இனிக் கொடுக்க விரும்பும் இஷ்டம் ஏற்படட்டும். போகபரர்களான ஜந்துக்களிடமும் யஜமானர்களிடமும் பிரியம் வரட்டும். யஜமானனான எனக்குப் பிரியத்தை அதிகமாகச் செய். தேவர்கள் உக்கிரர்களான அஸுரர்களிடத்தில் "இவர்கள் கொல்லத் தக்கவர்கள்" என்று எப்படி ச்ரத்தையைச் செய்தார்களோ, அவ்விதமே பயனையனுபவிக்கும் யஜமானர்களிடம் அதிகமன பிரியத்தைச் செய். ஏ இந்திராதி தேவர்களே! இந்த யஜமானர்கள தமது பிராணனை ரக்ஷிப்பவர்களாய் சிரத்தையை உபாஸிக்கிறார்கள். மனதிலுண்டான ஸங்கல்பக் கிரியையினால் சிரத்தையை ஆதரவுடன் உபாஸிக்கிறார்கள். சிரத்தையினாலேயே ஹவிஸூம் ஹோமம் செய்யப்படுகிறது. சிரத்தையைக் காலையிலும் மாலையிலும் அப்படியே மத்யான்ன காலத்திலும் ஸூரியன் அஸ்தமிக்கும் காலத்திலும் கூப்பிடுவோம். ஏ சிரத்தையே! இந்தக் கர்மத்தில் விச்வாஸத்துடன் கூடினவனாக என்னைச் செய். சிரத்தை தேவர்களிடம் வஸிக்கிறாள். இவ்வுலகம் ச்ரத்தா மயம், (விருப்பம், விச்வாஸம் இவைகளைத் தவிர வேறு வியவஹாரமேயில்லையாதலால்) விரும்பிய பலனை உண்டுபண்ணும் (அளிக்கும்) ச்ரத்தா தேவியை (லக்ஷ்மியை) இந்த ஹவிஸ்ஸால் ஸந்தோஷமடையச் செய்வோம். ஸாயணர் பாஷியப்படி அர்த்தம் சொல்லப்பட்டது. நஞ்ஜீயர் ஸ்ரீ ஸூக்த பாஷ்யத்தில் சொல்லிய சிலவிசேஷங்கள் சொல்லப்படுகின்றன:-

"ச்ரத்தாம் தேவா யஜமாநா: உபாஸதே" என்பதினால் ச்ரத்தாதேவி ஸர்வதேவர்களாலும் உபாஸிக்கப்படுகிறாள்- என்பது அறியத்தக்கது. தேவர்கள் என்று சொன்னது மனிதர்களுக்கும் உபலக்ஷணம்.

"ச்ரத்தாம் ப்ராதர் ஹவாமஹே" இது முதலான வாக்கியங்களால் மூன்று ஸந்தியாகாலங்களிலும் ச்ரத்தா தேவி (லக்ஷ்மி) உபாஸிக்கத் தகுந்தவள் - என்பது சொல்லப்பட்டது. "ச்ரத்தா தேவாந்அதிவஸதே" என்பதால் ஸர்வதேவதைகளிலும் அந்தர்யாமியாயிருக்கிறாள் லக்ஷ்மி என்று சொல்லப்பட்டது. "ச்ரத்தா விச்வமிதம் ஜகத் " என்பதனால் சரீராத்மபாவம் ஏற்படும். "ச்ரத்தாம் காமஸ்ய மாதரம்" என்பதால் எல்லாப்பயனையும் அளிப்பவள் என்பது சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ச்ரத்தையென்னும் லக்ஷ்மியை உபாஸிக்கிறோம்.
(இது எனது அபிமதத்தை ஸாதிக்கும் என்று விச்வாஸத்தை முன்னிட்டு ஸாதநத்தில் த்வரை) என்று ஸ்ரீகீதா பாஷியம், விச்வாஸம் த்வரை வரையில் சொல்லவேணும் என்பது அறியவும்.